பக்கங்கள்:-14

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 27 | சனிக்கிழமை | 12.08.2023 | அதிர்வு 11

## மின்னல் தாக்கி மூவர் உயிரிழப்பு!

மிஹிந்தலை பகுதியில் மின்னல் தாக்கில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மிஹிந்தலை – தம்மனாவ வாவியில் நேற்றைய தினம் மீன்பிடிக்கச் சென்ற மூவரே இவ்வாறு மின்னல் தாக்கி 02▶

# இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு இலங்கையும் இந்தியாவும் முன்னுரிமை

## பாரதத்தின் புதிய பிரதித் தூதர் தெரிவிப்பு




**கொழும்பு, ஓகஸ்ட் 12**

இலங்கையுடனான உறவில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான அதிகபட்ச ஆதரவை வழங்கவுள்ளதாக இலங்கைக்கான புதிய இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே தெரிவித்துள்ளார். 03▶

## கெஹலிய எதிரான பிரேரணை அடுத்த மாதத்தில்தான் விவாதம்



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம்செப்டெம்பர்மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர் 03▶

## சைக்கிளோட்ட மாணவர் பஸ்ஸுடன் மோதி சாவு!

சைக்கிளோட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவர் பஸ் மோதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு – குருணாகல் வீதியின் வால்பிட்ட பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சைக்கிளோட்டப் போட்டியில் பங்குபற்றும் நோக்குடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது எதிரே வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பலத்த காயமடைந்த பாடசாலை மாணவன் 02▶

# ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்கும் அரசின் முடிவுக்கு எதிரான மனு நிராகரிப்பு!

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் கிடைக்கப்பெறும் அனுகூலங்கள் குறைக்கப்படுவதினால் ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன எனத் தெரிவித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்தது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது, அரசாங்கப் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளுக்குச் செலுத்தப்படும் வட்டியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வழங்கப்பட்ட அனைத்து பத்திரங்களையும் மீண்டும் வழங்குவதன் மூலம், 2025 வரை 12 வீத வட்டியும், அதன் பின்னர் 9 வீத வட்டியும் வழங்கப்படவுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் ஊடாக உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன எனக் குறிப்பிட்டுத் தீர்ப்பளிக்குமாறு கோரி ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவரும், நிதி ஆய்வாளருமான சதுரங்க அபேசிங்க இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பில் ஆராய்ந்த, விஜித் மலல்கொட, காமினி அமரசேகர மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மனுவை நிராகரித்து உத்தரவிட்டுள்ளது.

## 'இரு தேசம் ஒரு நாடு' எனப் பூச்சாண்டி காட்டி இனவாத சக்திகளுக்குச் சோரம் போகின்றனர்!

### கஜேந்திரர்கள் அணி மீது ஸ்ரீரங்கேஸ்வரன் பாய்ச்சல்




"இரு தேசம் ஒரு நாடு" எனப் பூச்சாண்டி காட்டி வருபவர்கள் 13 ஆவது அரசமைப்புத் தொடர்பில் தென்னிலைங்கை இனவாத சக்திகளுக்கு சோரம் போகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். 03▶

## இரகசியம்



அரசியல் நரித் தந்திரங்கள் புரிவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகரில்லாதவர். இலங்கை அரசியலில் நீண்ட காலம் தாக்குப்பிடிப்பவர். 45 வருடங்களுக்கு மேல் எம்.பியாகத் தொடர்ந்து இருப்பவர். 02▶

## இரகசியம் பரகசியம்...

அதனால் 'கிழட்டு நரி' எனப் பெயர் எடுத்தவர்.

அவரது தற்போதைய போக்கை – தமிழருக்கு ஒரு முகத்தையும், சிங்கள வர்களுக்கு மற்றொரு முகத்தையும் காட்டும் அவரது தந்திரத்தை – சுட்டி அவரை 'விலாங்கு மீன்' தந்திரோபாயக்கா ரர் என்று நாமம் சூட்டியிருக்கிறார் தமிழ் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன்.

'சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தா னாம் ஆண்டி' என்ற மாதிரி கடந்த 35 வருடங்களாக, ஒழுங்காக நடைமுறைப் படுத்தப்படவில்லையாயினும் குறைந்த பட்சம் அரசமைப்பின் ஒரு பகுதியாக அந்த அரசமைப்புச் சட்டப் புத்தகத்தில் இருந்த 13 ஆவது திருத்தத்தை, ஏதோ நடைமுறைப்படுத்தப் போகின்றவர் போல பாவ்லா காட்டி, ஆரவாரப்படுத்தி, சர்ச்சையாக்கி, அதை அரசமைப்பில் இருந்து முழுமையாக நீக்க வேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கை யில் பூதாகரமாகக் கிளம்ப வழி செய்து கொடுத்திருக்கின்றார் அவர்.

அந்தச் சர்ச்சையை விஸ்வரூப உருவெடுக்க வைப்பதற்காக அவரது அரசின் அரூபக்கரங்கள் 'பிள்ளை யையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும்' கைங்கரியத்தையும் ஆரம்பித்திருக் கின்றன என்ற உள்வீட்டுத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

13 ஆம் திருத்தத்திற்கு எதிராக – குறிப்பாக பொலிஸ், காணி அதிகாரப் பகிர்வை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு எதிராக – அடுத்த கட்டமாக பௌத்த மத பீடங்கள் – விசேடமாக மகா நாயக்கர்கள் – கிளர்ந்தெழுவார்கள் என்று தென்னிலங்கை வட்டாரங்கள் கூறுகின்றன.

பௌத்த பீடங்களைத் தூண்டிவிடும் விடயத்திலும் பின்னணியில் கதை, வசனம், டைரக்ஷன், ஒழுங்கமைப்பு எல்லாமே நமது கிழட்டு நரித் தந்திரசாலி யின் ஏவு'கணைகள்'தான் என்கின்றன தெற்கு ஊடக வட்டாரங்கள்.

தென்னிலங்கையின் பிரதான கட்சிக ளில் ஒன்றான பொதுஜன பெரமுனவில் முக்கியஸ்தர் ஒருவருடன் தொலை பேசியில் உரையாடினேன். ஜனாதிபதி பதவிக்கு ரணிலைக் கொண்டு வந்ததன் விளைவை தங்கள் கட்சி இப்போது அனுபவிப்பதாக அவர் கூறினார். அவரின் கதையின் – விசனத்தின் – சாரத் தின்படி 'ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த கதையாக' மொட்டு கட்சியின் நிலைமை வந்துவிட்டதாம். கூடாரத்துக்குள் ஓரத் தில், ஒட்டி ஒடுங்கிப் புகுந்து கொண்ட ரணில் என்கின்ற ஒட்டகம், கூடாரத்தில் இருந்த எல்லோரையும் நெட்டி வழியே தள்ளிவிட்டு, முழுக் கூடாரத்தையுமே ஆக்கிரமிக்கும் நிலைமை வந்துவிடும் போல என்று ஆதங்கமாக அமைந்தது அவரது எரிச்சல்.

சில விடயங்களில் தாம் எடுத்த முடி வில் இம்மியளவும் விட்டுக் கொடுக்காத வர் ரணில் என்று அவருக்கான ஊடகப் பணியில் இருக்கும் ஓர் அனுபவஸ்தர் கூறினார். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற நிலைப்பாட்டை எடுத்தால், அதனை விட்டுக் கொடுக்க மாட்டார், 'முதலைப் பிடியில்' நிற்பார் என்றார் அந்த நண்பர்.

ஆக, ரணில் இப்போது கிழட்டு நரி, விலாங்கு மீன், ஆண்டி, ஒண்ட வந்த ஒட்டகம், பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுபவர், தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பவர், முதலை – என்று பல அடைமொழி களால் அழைக்கப்படும் நிலைக்கு வந்து விட்டார்.

இப்படி வேறு பல உயிரினங்களின் பெயர்களைத் தமது அடைமொழி யாகப் பெறும் பெருமை வேறு ஜனாதி பதிகளுக்கு கிட்டவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அந்தப் பெயர்கள் எல்லாம் அவர் குறுகிய ஒரு வருடத்துக் குள் சம்பாதித்து, சவீகரித்துக் கொண டவை ...!

## மின்னல் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில்அந்தப் பகுதியை சேர்ந்த மூவரே உயிரிழந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சைக்கிளோட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் தார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித் தனர் .

மினுவாங்கொட ஹீனஹிட்டியான பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.


# 'யோகியர் சிகிச்சை இரகசியம்' யாழ் இந்துவில் நூல் வெளியீடு

ஸ்ரீ நந்தகுமார் எழுதிய "யோகியர் சிகிச்சை இரகசியம் (பிராண சிகிச்சை)" நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 4 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி முகுந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தெல்லிப்பளை துர்காதேவி அம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் கலந்து கொள்வார்.

நூலின் ஆய்வுரையை யாழ் பல்க லைக்கழக சித்த மருத்துவ பீடத் தலைவர் கலாநிதி விவியன் ஆற்றுவார்.

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் செந்தில் மாறன், உப அதிபர் விமலநாதன், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் எம்.கஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கொழும்பில் சீனக் கப்பல்

நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படைக் கப்பல் 'ஹை ஜாங்' இன்று கொழும்பை விட்டுப் புறப்படுகின்றது.

கப்பலுக்குத் தேவையான பொருள்களை நிரப்புவதற்காக என்ற கோரிக்கையின் பேரில் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைந்தது என்று சம்பந்தப்பட்ட தரப்புகளில் கூறப்பட்டது.

தனது தென்முனை அயல்நாடான இலங்கைக்கு சீனக் கப்பல்கள் அடிக்கடி வந்து போவது தனது புவிசார் பாதுகாப்பு நிலைகளுக்கு ஆபத்தானது என்று கருதும் இந்தியா, அதனால் அத்தகைய கப்பல்களின் இலங்கை வருகை குறித்து தொடர்ந்து இலங்கைக்கு ஆட்சேபம் தெரிவித்து வருகின்றது.

இந்தக் கப்பலும் கூட இந்தியாவின் ஆட்சேபத்துக்கு மத்தியிலேயே கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தக் கப்பலின் கொழும்பு வருகைக்கான அனுமதி கோரி, நேரத்துடனேயே சீன அதிகாரிகள் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும் -

எனினும், இந்தியாவின் கடும் ஆட்சேபனை காரணமாக கடைசி நேரம் வரை இழுத்தடித்து, கடைசியில் தான் கப்பலின் கொழும்பு வருகைக்கு இலங்கை அரசு அனுமதி அளித்தது என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்திருக்கின்றன.

இந்தக் கப்பலின் கொழும்பு வருகை தொடர்பில் கொழும்பு அதிகாரிகள் நேரத்துடனேயே இந்தியத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தினர் என்றும் -

சீனாவின் ஆய்வு மற்றும் உளவுக் கப்பல் ரகத்தை இது சேர்ந்தது அல்ல என்பதால் அதன் கொழும்பு வருகை தொடர்பில் அதிக ஆட்சேபத்தையும் எதிர்ப்பையும் இந்தியா காட்டாமல் அமைதி பேணியதாகவும் இப்போது கூறப்படுகிறது

'யுவான் வாங்க் - 5' என்ற சீனாவின் செய்மதி ஆய்வு மற்றும் உளவுக் கப்பல் ஒன்றை கடந்த வருடம் இதே காலப்பகுதியில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் நுழைய அனுமதித்து, அதன் காரணமாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் கடும் ஆட்சேபத்தை கொழும்பு சந்திக்க வேண்டி நேர்ந்தது என்பதும் தெரிந்ததுதான்.

அந்தக் கப்பல் வானியல் மற்றும் செய்மதி தொடர்பான சகல விடயங்களையும் வேவு பார்த்து, உளவு செய்து கண்டறியும் திறன் கொண்டது என்றும் -

அதுவே அக்கப்பலின் அம்பாந்தோட்டைத் துறைமுக வரவையும் நங்கூரமிடலையும் இந்தியா கடுமையாக எதிர்த்தமைக்குப் பிரதான காரணம் என்றும் - அப்போது கூறப்பட்டது.

உலக வல்லாதிக்க நாடுகளாக முட்டி மோதிக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் கத்தியில் நடப்பது போல தனது செயற்பாடுகளை தந்திரமாக இலங்கை கொண்டு நகர்த்த வேண்டும். ஆனால் அதற்கான நேர்த்தியான, தேர்ந்த ராஜதந்திரம் கொழும்பிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் அதன் விளைவுகளை - நெருக்கடிகளை - இலங்கை அரசு சந்திக்க வேண்டி நேரும் என்பதும் தவிர்க்க முடியாத கட்டாயமாக அமையும்.

## இரு தரப்புப் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம் பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி பாண்டே ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் விகாஸ் சூத், உதவிப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் புனித் சுஷில் உள்ளிட்ட இந்திய அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும், இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் தம்மிக்க வெலகெதரவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கெஹலிய பிரதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி 45 எம்.பிக்களின் கையெழுத்துகளுடன் கையளித்தது.

தரமற்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பொறுப்பற்ற முறையில் வரவழைத்து சுகாதாரத்துறையை பலவீனப்படுத்தி நோயாளிகளின் உயிரிழப்பிற்கு பங்களிப்பு செய்தமைக்காக சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'இரு தேசம் ஒரு நாடு'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில் –

சமீபத்தில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது பல்வேறு கருத்துக்கள் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றிருந்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஆற்றிய விசேட உரை தொடர்பில் தான் உரிய நேரத்தில் பதில் வழங்குவார் என வழமை போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பொறுப்பற்ற கருத்தைக் கூறியுள்ளார்.

அதேநேரம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக கூறி, சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றுகின்ற காரியங்கள் அனைத்துமே பூச்சாண்டி காட்டுகின்ற வேலையாகத்தான் இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூறியிருந்தார்.

ஆனால் சமஷ்டியே தீர்வு என கூறியவர்கள், பின்னர் "இரு தேசம்ஒரு நாடு"என்றவர்கள் தற்போது "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்பதுதான் தான் சமஷ்டி எனப் புது வரைவிலக்கணம் கூற முனைகின்றனர்.

கஜேந்திரன் குழுவின் "இரு தேசம் ஒரு நாடு" என்ற நிலைப்பாடு என்னாச்சு? உண்மையில் தெளிவான அரசியல் நிலைப்பாட்டுக் கொள்கை இல்லாதவர்களே இவ்வாறு வாக்குகளை இலக்குவைத்து நாளொரு பொய்யும் பொழுதொரு புழுகுமாக அவ்வப்போது அறிக்கைவிட்டு வருகின்றனர். இதனால் ஏமாற்றப்பட்டப் போகின்றவர்கள் தமிழ் மக்களும் தமிழ் பேசும் மக்களும்தான். – என்றார்.




# குமரகுருபரன் விளையாட்டரங்கு திறந்துவைக்கப்பட்டது புத்தூரில்

புத்தூர் ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலையத்தின் விளையாட்டரங்க திறப்பு விழா புதன்கிழமை (09) மலை குமர குருபரன் மைதானத்தில் வெகு சிறப்புற நடைபெற்றது.



ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலையத்தின் கனடா கிளையின் நிதிப் பங்களிப்பில் காணி கொள்வனவு செய்யப்பட்டு அந்தக் காணியில் கந்தர் ஐயாத்துரை மற்றும் ஐயாத்துரை அன்னப்பிள்ளை ஆகியோரின் ஞாபகார்த்தமாக இந்த விளையாட்டு அரங்கு அமைக்கப்பட்டுள்ள. அவை உத்தியோகபூர்வமாக சன சமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகத்திடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை வைத்திய அதிகாரி திருமதி இரவீந்திர வசந்தமாலாவும் சிறப்பு விருந்தினர்களாக புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் அதிபர் சின்னத்தம்பி திரிகரன் மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் யாழ் போதனா வைத்தியசலையின் வைத்திய கலாநிதி இராசரத்தினம் துஷிந்தன், பொது சுகாதார பரிசோதகர் அனுதர்சன் ஆகியோரும் புலம்பெயர் உறவுகளில் இருந்து புத்தூர் குமர குருபரன் சனசமூக நிலையத்தின் கனடா கிளை சார்பாக அதன் தலைவர் செல்லப்பா சிவராஜா மற்றும் நிர்வாகக் குழுசார்பாக செல்லையா சோதிநாதன், இராதுரை சிவாசம்பு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சனசமூக நிலையத்தின் புதிய விளையாட்டரங்கில் கலை நிகழ்வுகள் மைதான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.



# வவுனியா இரட்டைக் கொலை விவகாரம்; சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

வவுனியா – தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட 6 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா – தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் பிரதான சந்தேகநபர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் முன்னதாக 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

வவுனியா – தோணிக்கல் பகுதியில் பிறந்த நாள் நிகழ்வொன்று இடம்பெற்ற வீட்டுக்குள் நுழைந்த அடையாளம் தெரியாத சிலர் அங்கு வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டமையுடன் வீட்டுக்கும் தீ வைத்தனர்.

இதன்போது, 21 வயதான யுவதி ஒருவர் உயிரிழந்தார். பின்னர் அவரது கணவர் வைத்தியசாலையில் வைத்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் சட்டவிரோத காணி அபகரிப்பு; வேலிகளைத் தகர்த்தெறிந்த மாகாவலி அதிகார சபை




மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி பகுதியில் அரச காணியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக் கட்டிய கம்பி வேலிகள் மாகாவலி அதிகார சபையினர் இடித்துள்ளனர்.

மாகாவலி அதிகார சபையினர், பலத்த இராணுவ பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று புல்டோசர் மூலம் கம்பி வேலிகள் இடித்து தள்ளியமையையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

வாழைச்சேனை கொழும்பு வீதியிலுள்ள நாவலடி தொடக்கம் ஜெயந்தியாலை பிரதேசம் வரையிலான ரயில் தண்டவாளத்துக்கும் வீதிக்கும் இடையிலான 28 ஏக்கர் அரச காணிகளே அபகரிக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய, நாவலடி ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த காணி அபகரிப்பாளர் சிலர் அந்தப் பகுதியில் காட்டு மரங்களை வெட்டி சட்டவிரோதமாக முள் கம்பி வேலிகள் நாட்டி கட்டடங்கள் கட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து கடந்த புதன் கிழமை வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சென்று காணி அபகரிப்பில் ஈடுபடுபவர்களிடம் இது அரச காணி, இந்தக் காணிகளுக்கு அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை அகற்றிக் கொண்டு உடனடியாக வெளியேற வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

அவ்வாறு இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவற்றை அகற்றிச் செல்வதற்கு 2 நாள் அவகாசம் தருகிறார்கள் எனவும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று பொலிஸார் மற்றும் இராணவப் பாதுகாப்புடன் மகாவலி அதிகாரசபையினர் முள் கம்பி வேலிகளை அகற்றியுள்ளனர்.

# வாள்களுடன் அட்டகாசம் செய்த இரண்டு பேர் வவுனியாவில் கைது

வவுனியாவில் வாள்களுடன் அட்டகாசம் புரிந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, வைரவபுளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தின் முன் நின்ற இளைஞர்கள் மீது புதன்கிழமை மாலை வாள் வீசி சிலர் அட்டகாசம் செய்துள்ளனர்.

இதன்போது நிலமையைக் கட்டுப்படுத்த முயன்ற புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவர் மீதும் வாள் வீசி தாக்குதல் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்றதும் வாள்களுடன் நின்றவர்கள் தப்பிச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் களமிறங்கிய விசேட அதிரடிப் படையினர் சம்பவத்துடன் தொடர்புடைய தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கைது செய்து வவுனியா பொலிஸில் ஒப்படைத்தனர்.

மற்றும் ஒரு நபர் வவுனியா பொலிஸில் சரணடைந்துள்ளார். சரணடைந்தவர் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இச் சம்பவத்தையடுத்து விசேட அதிரடிப் படையினர் வவுனியா வைவரவபுளியங்குளம் பகுதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

# மீண்டும் வருகிறது மின்வெட்டு!

எதிர்வரும் 16ஆம் திகதிக்கு பின் தென் மாகாணத்தில் சுமார் 10 நாள்களுக்கு இரண்டு மணித்தியால மின்வெட்டு ஏற்படும் சாத்தியம் இருப்பதாக சிரேஷ்ட மின்சாரப் பொறியியலாளர் சங்கத்தின் பேச்சாளர் நந்திக பத்திரகே தெரிவித்துள்ளார்.

எனினும் நாடளாவிய ரீதியில் மின்வெட்டு இருக்காது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்துக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் மொத்த நீர் கொள்ளளவு 31 வீதமாகக் குறைந்துள்ளது. சமனல ஏரி நீர்த்தேக்கத்தின் மொத்த கொள்ளளவு 16 வீதத்தில் இருந்து 7 வீதமாகக் குறைந்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் போதிய மழை பெய்யாவிட்டால் எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் மட்டுமே மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். அப்போது அவசர மின் கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இல்லையெனில் மின்வெட்டுக்குச் செல்ல நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய காலநிலை காரணமாக குறுகிய கால மின்வெட்டு ஏற்படும். மழை பெய்யாவிட்டால் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு பின்னர் சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது.

எவ்வாறாயினும், நாடளாவிய ரீதியில் மின்வெட்டு இருக்காது. தென் மாகாணத்தில் மாத்திரம் இரவு வேளையில் ஒன்றரை முதல் இரண்டு மணித்தியாலங்கள் வரை மின்வெட்டு மேற்கொள்ளப்படும்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தையும் அடுத்த வாரத்தில் இருந்து மீண்டும் தேசிய அமைப்பில் இணைத்து கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

# நீதிமன்றில் மாயமான மோ.சைக்கிள் பக்கத்து வாவிக்குள் இருந்து மீட்பு!





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதி வாகனக் களஞ்சியசாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் திருட்டுப் போயிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மூன்று மாதங்களின் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள மட்டக்களப்பு வாவியில் இருந்து தாங்கள் மீட்டுள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பிரதேசத்தில் கடந்த வருடம் மோட்டர் சைக்கிளில் சட்டவிரேதமாகக் கசிப்புக் கடத்தலில் ஈடுபட்ட ஒருவரை பல்சர் ரக மோட்டர் சைக்கிளுடன் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் மோட்டர் சைக்கிளைப் பறிமுதல் செய்து, அதனை அரச உடமையாக்கியது. நீதிமன்ற வளாகத்துக்கு அருகிலுள்ள களஞ்சியசாலை பகுதியில் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த மே மாதம் 4 ஆம் திகதிக்கும் 8 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த மோட்டர் சைக்கிள் திருட்டுப் போயுள்ளதாக 8 ஆம் திகதி நீதிமன்றப் பதிவாளர் மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து இச் சம்பவம் தொடர்பாக மாவட்ட உதவி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்புத் தலைமையக பொலிஸ் நிலையப் பிரதம பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜீ.எம்.பி.ஆர். பண்டாரவின் நெறிப்படுத்தலில் பெரும் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் கஜநாயக்கா தலைமையிலான பொலிஸ் குழுவினர் மற்றும் புலனாய்வு பிரவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் மேற்படி வாவியில் நேற்று இயந்திர படகு மூலம் மேற்கொண்ட தேடுதலின் போது மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது.

மீட்டகப்பட்ட மோட்டார் சைக்கிளை நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப் படுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வறட்சியினால் நாட்டிலுள்ள பத்து வாவிகள் வற்றியுள்ளன

வறட்சியினால் நாடுமுழுவதிலும் உள்ள 10 சிறிய வாவிகள் வற்றிப்போயுள்ளன என விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், பல மாவட்டங்களில் நெல் செய்கை மற்றும் பயிர்ச் செய்கைகளுக்கு தேவையான தண்ணீரை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குருநாகல் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களின் பல பகுதிகளில் சிறு வாவிகள் வற்றிப்போயுள்ளமையினால், அந்தப்பகுதிகளில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குருநாகல், அனுராதபுரம் அம்பாறை, மொனராகலை மற்றும் ஹம்பாந் தோட்டை மாவட்டங்களில் பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த பயிர்களை பாதுகாப்பது மிகவும் கடினமாக உள்ளது எனவும் வாவிகளில் கிணறுகள் தோண்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

பருவ மழை பெய்யாமை மற்றும் வெப்பமான காலநிலையே வாவிகள் வேகமாக வறண்டு போனமைக்கு காரணம் என அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# மார்ட்டீன் வீதி கொலை வழக்கில் மரணதண்டனைத் தீர்ப்பு தள்ளுபடி!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதி கொலை வழக்கில் எதிரிக்கு விதிக்கப்பட்டிருந்த மரணதண்டனை மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு எதிரி விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேன்முறையீட்டு தீதிமன்ற நீதியரசர்கள் மேனகா விஜயசுந்தர, சசி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதி மன்ற அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கி யுள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியைச் சேர்ந்த 85 வயதுடைய தேவராசா லில்லி மேரி என்பவரை, 2008 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 29 ஆம் திகதி கொலை செய்ததார் என இறந்தவரின் வீட்டில் வசித்து வந்த குணபாலசிங்கம் ஜெறோம் என் பவருக்கு எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்கு தொடுக்கப்பட்டது.

தனது வீட்டிலிருந்து திடீரென காணா மல் போயிருந்த அந்த மூதாட்டியின் மாதங்களின் பின்னர், அவரின் வீட்டின் பின்புறத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலை யில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட் டார்.

எதிரியின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து, அப்போ தைய யாழ்ப்பாண நீதிவான் ஆர். வசந்த சேனன் முன்னிலையில் யாழ்ப்பாண பொலீஸாரால் புதைகுழியில் இருந்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி கே. இரத் தினசிங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில், கழுத்து நெரிக் கப்பட்டதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் மற்றும் மொட்டையான ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டதனால் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு என்பன காரணமாக மரணம் உடனடியாகவே நிகழ்ந்ததாகக் கண்டறி யப்பட்டது.

இறந்தவர் காணாமல் போயிருந்த காலப்பகுதியில் அவர் வாழ்ந்த அதே வீட்டில் தனது மனைவி, பிள்ளையுடன் வாழ்ந்து வந்த எதிரி பொலீஸாரால் கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, இரண்டு நகைக்கடைகளில் இருந்து உருக்கப்பட்ட நிலையில் சில நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நடாத் தப்பட்ட வழக்கு விசாரணையில் அரச தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியத்தை தொடர்ந்து, எதிரியும் சாட்சியம் அளித்தார்.

இறந்தவர் காணாமல் போவதற்கு முன்னரே தனது மனைவியுடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தினால் இறந்தவர் வசித்த வீட்டிலிருந்து தான் தனியே வெளியேறிச் சென்றுவிட்டார் எனவும், தொடர்ந்து பொய் யான தகவல் ஒன்றின் அடிப்படையில் இராணுவப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு மூன்று வாரங்கள் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டார் எனவும் அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார்.

இறந்தவரின் வீட்டிற்கு தனது மனைவி மற்றும் பிள்ளையைத் தேடி தான் சென்ற போது, அங்கு யாரும் இருக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். இறந்த வரின் கொலைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இவ்வழக்கில் தான் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போது தனது மனைவி இறந்துவிட்டார் என்று அறிந்து கொண்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையின் முடிவில் தீர்ப்பு வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளச்செழியன், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால், திருப்திகரமான முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, குற்றத்தீர்ப்பு வழங்கி எதிரிக்கு மரண தண்டனை விதித்திருந்தார்.

2017 ஆம்ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பையும் மரணதண்டனையையும் ஆட்சேபித்து எதிரியினால் மேன்முறையீடு செய்யப் பட்டது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதி மன்றில் நடைபெற்ற மேன்முறை யீட்டு விசாரணையில், கொலைக்குற் றச்சாட்டுக்கு எதிரியைக் குற்றவாளி என தீர்ப்பளிப்பதற்கு போதுமான சாட்சி யம் இல்லை என அவரின் சார்பில் வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களும் சமர்ப்பிக்கப் பட்ட நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டிருந்தது.

நீதியரசர்கள் மேனகா விஜயசுந்தர, சசி மகேந்திரன் ஆகியோர் தமது தீர்ப்பில், குற்றச்சாட்டு நியாயமான அளவு சந்தே கத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என தெரிவித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிட்டனர்.

மேன்முறையீட்டு விசாரணையில் எதிரியின் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி எஸ். பஞ்சாட்சரத் தின் அனுசரணையுடன் ஆஜரானார். பிரதிவாதியான சட்டமா அதிபர் சார் பில் அரச சட்டவாதி சமிந்த விக்கிரமரத்ன வாதாடினார்.

# கிழக்கு முன்னாள் எம்.பிக்கள் ஆளுநருடன் சந்தித்துப் பேச்சு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையி லான சந்திப்பொன்று நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இச்சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், க.கோடீஸ்வரன், கி.வெள்ளிமலை, ஞா.ஸ்ரீநேசன் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர் .

இச்சந்திப்பு குறித்து ஞா.ஸ்ரீநேசன் பின்வருமாறு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்:-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்களாகிய நாம் கிழக்கு மாகாண மக்கள் சமகாலத்தில் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடியிருந்தோம். அவற்றில் சிலவற்றுக்கு அவ்விடத்திலேயே செயலா ளர்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஆளுநர் பணித்திருந்தார்.

மேற்படி சந்திப்பில் கிழக்கு மாகாணத் தில் படையினரின் வசமுள்ள காணி களை விடுவிப்புச் செய்வது, மயிலத்தான மடு மாதவனை பிரதேசத்தில் தொடர்ந் தும் அத்துமீறி அபகரிக்கப்பட்டுவரும் மேய்ச்சல் தரை காணிகள், கிழக்கில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபான சாலைகள், சட்ட விரோதமான மண் அகழ்வு, காணி அபகரிப்புகள், காட்டு யானைகளின் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டது. இளைஞர், யுவதி களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் தொடர்பிலும் எம்மால் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மட்டக்களப்பு புதுநகரில் விமானப் படையினரால் வசப்படுத்தப் பட்டுள்ள வலையிறவு பிரதான வீதியை மீளவும் பொதுமக்களின் பாவனைக்கு விட வேண்டும், தாண்டியடி பிரதேசத்தில் பொலிஸாரினால் அபகரிக்கப்பட்டுள்ள மயான காணியை விடுவிக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்றும் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் வலயங்களுக்கு மாத்திரம் பாரபட்சமான முறையில் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை தொடர்பிலும் அதனால் கிழக்கில் உள்ள தமிழ் கல்வி நிர்வாக சேவை உத்தியோ கத்தர்கள் அதிருப்தியடைந்துள்ளமை பற்றியும் எம்மால் ஆளுநருக்கு எடுதுரைக் கப்பட்டது. அவ் விடயம் தொடர்பில் பாரபட்சமின்றி உடன் நடவடிக்கை களை முன்னெடுக்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாருக்கு ஆளுநர் அவ்விடத்திலேயே அறிவுத்தல்களை வழங்கினார். - என அவர் தெரிவித்தார்.



# யூனியன் கல்லூரி மாணவர்கள் நேற்று ஆசிரியருக்கு எதிராகப் போராட்டம்!

யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக நேற்று மதியம் பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை முடிவடைந்ததும் பாடசாலை பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய உயர்தர மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் பாடசாலைக்கும் பாடசாலை அதிபருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டார் எனத் தெரிவித்தே மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திங்கட்கிழமை உயர்தர மாணவர்களின் மதிப்பீட்டு அறிக்கை தொடர்பாக பெற்றோருக்கான கலந்துரையாடல் இடம்பெற்றபோது கலந்துரையாடலுக்கு பெற்றோர்வராத மாணவர்களை அதிபர் வகுப்புக்கு வெளியே நிறுத்தி வைத்தார்.




இதன்போது பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் மாணவிகளிடம் சாதாரணமாக உரையாடுவது போன்று உரையாடி, அதனை இரகசியமாகத் தனது தொலைபேசியில் காணொலி எடுத்து, சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி, பாடசாலைக்கும், மாணவிகளுக்கும் களங்கத்தை ஏற்படுத்தினார் என்று தெரிவித்து, அந்த ஆசிரியரை இடமாற்றுமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தெல்லிப்பழைக் கோட்டக் கல்வி பணிப்பாளர் வேலாயுதர் அரசகேசரி மாணவர்களுடன் கலந்துரையாடினார். அவரிடம் மாணவர்களினால் கோரிக்கைக் கடிதமும் வழங்கப்பட்டது.

இதனை வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வருவார் என அவர் வாக்குறுதி வழங்கியமையை அடுத்து மாணவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.





# தீவிரமாகும் வறட்சி நிலைமை
## நீர் விநியோகிப்பதில் சிக்கல்!

நாட்டில் நிலவும் வறட்சியினால் 18 பிரதேச மத்திய நிலையங்களுக்கு நீர் விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 344 நீர் விநியோக மத்திய நிலையங்கள் காணப்படுகின்றன என நீர் வழங்கல் வடிகால மைப்பு சபையின் தெற்கு பிராந்திய உதவி பொது முகாமையாளர் சமந்த குமார தெரிவித்துள்ளார்.

அவற்றில் 32 நீர் விநியோக மத்திய நிலையங்கள் மிக நெருக்கடி மட்டத்தில் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரதேசங்கள் வலயங்களாகப் பிரிக்கப்பட்டு நேர அட்டவணையின் அடிப்படையில் நீர் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சில பகுதிகளில் கொள்கலன் தாங்கிகள் மூலம் நீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக நீர் வழங்கல் வடிகால மைப்பு சபையின் தெற்கு பிராந்திய உதவி பொது முகாமையாளர் சமந்த குமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெப்பமான கால–நிலையினால் ஹம்பாந்தோட்டை, பதுளை, மொனராகலை, அம்பாறை, குருணாகலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

# முள்ளியவளை பொதுச் சந்தையில்
## விசமிகள் குழு புகுந்து அட்டகாசம்



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழுள்ள முள்ளியவளை பொதுச் சந்தையில் நேற்று வியாழக்கிழமை இரவு அடையாளம் தெரியாத விசமிகள் சிலர் புகுந்து தாக்குதல் மேற் கொண்டதில் வியாபாரிகளின் மரக்கறிகள் மற்றும் சந்தை கட்டங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இரவு காவலாளி சந்தையின் முன் கதவைப் பூட்டிய நிலையில் வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று சந்தையின் கதவை உடைத்து உள்ளே புகுந்து சந்தைக்குள் இருந்து மது அருந்தபோவதாக காவலாளியுடன் முரண்பட்டிருக்கின்றது. கையில் மதுபான போத்தல்களுடன் வந்த நபர்கள் சந்தை கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இதனால் இன்று வெள்ளிக்கிழமை காலை சந்தையைப் பூட்டி, பொலிஸார் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் வலியுறுத்தியுள்ளார்கள். காலை 10 மணிவரை பொலிஸார் வந்து விசாரணை செய்யும் வரை சந்தை நடவடிக்கைகள் இடம் பெறவில்லை.

சம்பவ இடத்திற்கு முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் வருகை தந்தனர். கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் க.சண்முகநாதன் உள்ளிட்ட சபையின் உத்தியோகத்தர்கள் வந்து பார்வையிட்டு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார்கள்.

# பெரும் பற்றாக்குறை நிலவிய 14 ரக மருந்துகள் இறக்குமதி

பற்றாக்குறை நிலவிய 14 வகையான மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் மூலம் நாட்டில் பற்றாக்குறை நிலவும் மருந்துகளின் எண்ணிக்கை 242 ஆக குறைவடைந்துள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், இந்தியக் கடனுதவி திட்டத்தினூடாக நூற்றுக்கும் அதிக மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான முற்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த மாதத்திற்குள் இந்த மருந்துகள் நாட்டிற்கு கிடைக்குமென எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# மணிப்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கும்போது பிரதமர் மோடி நகைச்சுவையாகப் பேசுகிறார்!

## - ராகுல் காந்தி கண்டனம்



மணிப்பூர் பற்றி எரியும்போது, பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் நகைச்சுவையாகப் பேசுவது கண்டனத்துக்குரியது என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு பதில் அளித்து பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் வியாழக்கிழமை உரையாற்றினார்.

இந்த நிலையில், புதுடில்லியில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்த காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் நகைச்சுவையாகப் பேசியதற்குக் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார். இதன்போது ராகுல் காந்தி மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பேசியதைக் கேட்டேன். அவர் நகைச்சுவையாகப் பேசுகிறார். சிரிக்கிறார். தேசிய ஜனநாயகக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கோஷங்களை எழுப்புகின்றனர். ஒரு பிரதமருக்கு இது அழகல்ல.

மணிப்பூர் பற்றி எரிய வேண்டும் என்று பிரதமர் விரும்புகிறார். நான் கடந்த 19 ஆண்டுகளாக அரசியலில் இருக்கிறேன். எல்லா மாநிலங்களுக்கும் சென்றிருக்கிறேன். ஆனால், மணிப்பூரில் நாங்கள் பார்த்ததை வேறு எங்கும் பார்க்கவில்லை. அங்கு என்ன நடந்தது என்பதை நான் தற்போது சொல்ல வேண்டும்.

நாங்கள் மேத்தி சமூக மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்றபோது, அந்த இடத்திற்கு குகி சமூக மக்களை அழைக்காதீர்கள் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. அங்கு வந்தால் அவர்கள் கொல்லப்படுவார்கள் என கூறினார்கள். இதே நிலைதான் குகி மக்கள் வசிக்கும் இடத்திலும் இருந்தது. மணிப்பூர் குகி, மைத்தி என இரண்டாக பிரிந்திருக்கிறது. அது ஒரு மாநிலமாக இல்லை. இதைத் தான் நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தேன்.

மணிப்பூரில் நிலைமையைக் கட்டுப்படுத்த பிரதமர் நினைத்திருந்தால் முடிந்திருக்கும். அதற்கான பல்வேறு கருவிகள் அவரிடம் உள்ளன. ஆனால், பிரதமர் தனது கடமையைச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, நாடாளுமன்றத்தில் அவர் சிரித்து சிரித்துப் பேசுகிறார். பிரதமர் மோடி மணிப்பூருக்குச் சென்றிருக்க வேண்டும். அங்குள்ள மக்களோடு பேசி இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## ஒட்டுமொத்த இராணுவமும் தயார் நிலையில!

கடந்த ஒன்பது ஆண்டுகளில் சீனாவுடனான உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு வழியாக எல்லை உள்கட்டமைப்பை இந்தியா கணிசமாக மேம்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக எந்தவொரு பாதுகாப்பு சவாலையும் எதிர்கொள்ள நாட்டின் ஒட்டுமொத்த இராணுவத் தயார்நிலையை மேம்படுத்தியுள்ளது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள் குழுவுடனான உரையாடலில் இவ்வாறு குறிப்பிட்ட அமைச்சர், இந்தியாவும் சீனாவும் கடந்த மூன்று ஆண்டுகளில் பேச்சு மூலம் கிழக்கு லடாக்கில் ஐந்து முதல் ஆறு மோதல் புள்ளிகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது எனவும் மீதமுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். 2014 இல் மோதல்கள் நடந்திருந்தால் ஏற்பட்டிருக்க கூடிய விடயங்கள் ஆச்சரியமளித்திருக்கும் என்றும் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

# விலைவாசி உயர்வு தொடர்பில் தி.மு.க. கவலைப்படவில்லை!

### - அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி குற்றச்சாட்டு



தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மகளிர் உரிமைத் தொகையை தமிழக அரசு வழங்க வேண்டும் என்று மக்கள் கேட்கின்றனர் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி முன்னிலையில், தமிழ்நாடு தொழிற்சங்க உரிமை பாதுகாப்பு கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள், தொழிலாளர்கள் உள்பட 1,500 இற்கும் மேற்பட்டோர் அ.தி.மு.கவில் இணையும் நிகழ்ச்சி சேலத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி உரையாற்றுகையில், தமிழகத்தில், கட்டுமான பொருள்கள் விலை உயர்வால், பல இடங்களில் கட்டடங்களின் கட்டுமானப் பணி பாதியில் நிற்கிறது. புதிய கட்டடங்கள் வராமல் உள்ளது. கட்டுமான தொழிலில் உள்ளவர்கள் வேலையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். கட்டுமான தொழிலில் ஈடுபட்டிருந்த முதியோர்களுக்கான உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் கட்டுமான தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தில், விலைவாசி 50 சதவீதம் உயர்ந்துவிட்டது. ஆனால், விலைவாசி உயர்வு குறித்து, தி.மு.க. அரசு கவலைப்படவில்லை. அ.தி.மு.க. ஆட்சியின்போது, புளி விலை உயர்ந்தது. இதனைக் கட்டுப்படுத்த சிறப்பு நிதி ஒதுக்கி, புளி கொள்முதல் செய்து, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பனை செய்தோம். ரேஷன் கடைகளில் அனைத்து பொருட்களையும் முழுமையாக வழங்கினோம். திமுக ஆட்சியில் நிலைமை தலைகீழாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ஈக்வடாரில் ஜனாதிபதி வேட்பாளர் கொலை; இது வரை ஆறு வெளிநாட்டவர்கள் கைது!





தென் அமெரிக்க நாடான ஈக்வடாரில் ஜனாதிபதி வேட்பாளர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் வெளிநாட்டவர் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈக்வடாரில் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தேர்தலில் வேட்பாளர்களாக 8 பேர் போட்டியிடவிருந்த நிலையில், அவர்களில் ஒருவரான பெர்ணான்டோ விலாவிசென்ஸியோ சுட்டுக்கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளரான இவர் ஊழலுக்கு எதிராக தொடர்ந்து குரல்கொடுத்து வந்ததாக கூறப்பட்டுள்ளது.

தேர்தலில் களம் இறங்கிய பெர்ணான்டோ விலாவிசென்ஸியோ தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். தலைநகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பேசினார்.

பின்னர் தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு தனது காருக்கு திரும்பிய போது, கூட்டத்தில் இருந்த மர்ம நபரால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். பொலிஸார் குற்றவாளிகளை தீவிரமாக தேடிவந்த நிலையில், தலைநகரில், ஆயுதங்களுடன் ஒரு வீட்டில் பதுங்கியிருந்த 6 பேரை கைது செய்துள்ளனர். 6 பேரும் வெளிநாட்டினர் என தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் 60 நாட்களுக்கு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## நிலவில் தண்ணீர் உள்ளதா என்று ஆராய 'லுனா 25' விண்கலத்தை ஏவியது ரஷ்யா!



ரஷ்யா உருவாக்கிய 'லுனா 25' என்ற விண்கலம் நேற்று விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

இந்த விண்கலம் 5 நாட்கள் பயணம் செய்து நிலவின் சுற்றுவட்டப் பாதையை அடையும் என்றும், பின்னர் 5 முதல் 7 நாட்கள் சுற்றுவட்டப் பாதையில் பயணம் செய்து நிலவில் தரையிறங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலம் நிலவில் தரையிறங்கும் அதே நாளில் ரஷ்யாவின் லுனா-25 விண்கலமும் தரையிறங்குகிறது.

இதற்காக மூன்று இடங்களை ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவு செய்துள்ளனர்.

ரஷ்யா கடந்த 1976 ஆம் ஆண்டு முதல்முதலாக நிலவுக்கு விண்கலத்தை அனுப்பியது. அதன் பின் 47 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது விண்கலத்தை அனுப்பியுள்ளது.

நிலவில் மாதிரிகளை சேகரித்து நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்று லுனா-25 ஆய்வு செய்யும் என்றும் 2021 ஆம் ஆண்டே இந்த விண்கலத்தை ஏவ திட்டமிட்டு, பல்வேறு காரணங்களால் தாமதம் ஏற்பட்டதாகவும் ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## பயணப்பையில் சிறுமியை கடத்தியவர் கைது!



பிலிப்பைன்ஸில் சிறுமி ஒருவரை பயணப்பையில் வைத்து நபர் ஒருவர் கடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

8 வயது சிறுமி ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சிறுமியின் தாயார் வீட்டுக்கு வந்து பார்த்த பொழுது, சிறுமி வீட்டில் இல்லாததால் சீ.சீ.ரி.வியை பரிசோதித்துள்ளார்.

இதன்போது, சிறுமியை நபர் ஒருவர் பயணப்பையில் வைத்து கடத்தி செல்வது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டது. பின்னர் சிறுமி பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.08.2023




சில செயல்களில் தாமதங்கள் காணப்படும். பதட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும்.ஆன்மீக ஈடுபாடு உங்களை அமைதிப்படுத்தும்.

உங்கள் முக்கியமான பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் ஏற்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையை திருப்திபடுத்த இயலாது. உங்களால் முடிந்த அளவு இனிமையாகப் பேசிநிலைமையை சீராக்குங்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்புழக்கம் காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. தூக்க மின்மை காரணமாக இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும். முடிந்தால் நன்கு உறங்க முயற்சி செய்யுங்கள்.




இன்று உங்களுக்கு மிகவும் அமைதியான நாளாக அமையும்.சௌகரியமான நாளாக அமையும்.திருப்தியுடன் காணப்படுவீர்கள். நீங்கள்பெரிதாக எதையோ சாதித்தது போன்று உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் பணியில் இன்று இரகசியத்தை காப்பீர்கள்.நீங்கள் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமைக்கு வாய்ப்பு உள்ளது.

உங்கள் மனதில் நம்பிக்கை தரும் எண்ணங்களும் மகிழ்ச்சியும் காணப்படும்.




இன்று மகிழ்ச்சியாக இருப்பதற்கு உற்சாகமானதாக எதுவும் காணப்படாது. நீங்கள் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எடுத்த முடிவு தவறாக முடியும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும்.பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் உறவாடும் போது சில சிக்கல்கள் காணப்படும். இது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்களிடம் இருக்கும் ஒவ்வொரு பணத்தையும் சேமிக்க வேண்டும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குறைந்து காணப்படும் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள்.சில புத்திசாலித்தனமான திட்டமிடல் வெற்றியின் உச்சத்தை அடைய வழிகாட்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.பணிகளை திட்டமிட்டு கவனமுடன் ஆற்றுவதன் மூலம் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளலாம்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்பாராத வகையில் பண இழப்பு ஏற்படலாம். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் தாயாரின் சிறிய உடல் நிலை பிரச்சினை ஒன்றிற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று திருப்தியான பலனை பெறுவதற்கு உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் தன்னம்பிக்கையை இழக்கா தீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.எதிர்பார்ப்புடன் நன்மை தீமைகளை ஆலோசித்து அதன்படி பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையைப் புரிந்து கொண்டு அவரின் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை

இன்று பதட்டத்துடன் காணப்படுவீர்கள். அதனால் தோள்களில் வலிகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.இன்று கூடுதல் பலன்கள்கிடைக்கும்.முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று திட்டமிடலாம்.

நீங்கள் ஆற்றும் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.கடமை உணரச்சி மற்றும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஒரு விழா குறித்து உங்கள் துணையுடன் இனைந்து திட்டமிடுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.இது உங்கள் செயலிலும் எண்ணத்திலும் வெளிப்படும்.தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

புதிய வேலைவாய்ப்பிற்கான சாத்தியம் உள்ளது.இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணி செய்வதற்கான சாதகமான நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வளர்ச்சி அதிகமாக காணப்படும். சேமிப்பு திட்டங்களில் சேர்வதன் மூலம் நீங்கள் உங்கள் பணத் தேவைகளை மேம்படுத்தலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.




உங்கள் எதிர்மறை எண்ணத்தை வெளிப்படுத்துவீர்கள்.அதனை தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் முன்னேற்றம் காண்பது அரிது. யதார்த்தமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். இதற்கு உங்களின் கவனக் குறைவே காரணமாக இருக்கும்.இதை நீங்கள் தவிர்ப்பது நல்லது.திறமையான முறையில் ஒழுங்கமைத்து பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பைக் கொடுத்து அன்பைப் பெறுதல் என்ற கருத்துடன் இன்று பழகுவது நல்லது. இதனால் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் பொறுப்புகள் அதிகரித்து காணப்படும். இன்று இதனை தவிர்க்க முடியாது.

முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.08.2023




உங்கள் மனதை இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் ஓய்வாக வைத்துக் கொள்ள முடியும்.நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் மனதில் காணப்படும்.விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.அதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களின் ஈகோ உணர்வை வெளிபடுத்தாதீர்கள். நட்புடன் அணுகுங்கள்.

திடீர் செலவுகள் எதிர்கொள்ள நேரலாம். சேமிப்பிற்கென்று சிறிது பணத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்வது நல்லது.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




இன்று மிகுந்த ஆற்றல் காணப்படும். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் இருந்தால் இன்றை நாள் உங்களுக்கானது.சுய திட்டமிடல் மற்றும் புத்திசாலித்தனம் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

பணிநிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது. வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு தேவை.

நீங்கள் இருவரும் தகுந்த பொருத்தமுடையவர்கள். உங்கள் துணையிடம் நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள்.

எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆற்றல் மிகுந்து காணப்படுவீர்கள். எனவே ஆரோக்கியத்தை நன்கு பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.உங்கள் நலனை மேம்படுத்தும் பயனுள்ள முடிவுகளுக்கான திட்டங்களை மேற்கொள்வீர்கள். எந்தச் செயலாக இருந்தாலும் அதை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

பிறர் பார்த்து பின்பற்ற முடியாத பாணியில் பணியாற்றுவீர்கள்.உங்களின் இந்த தனிப்பட்ட அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெற்றுத் தரும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் ஒருவருக்காக மற்றவர் என்பது போல ஒருமித்த உணர்வுடன் காணப்படுவீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமையுடன் காணப்படுவீர்கள். புதிய முதலீடுகள் செய்வதற்கு இது உகந்த நாள்.

இன்று சகஜமாகவும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.




நீங்கள் விருந்துகள் மற்றும் ஆன்மீகச்சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு இன்றைய நாளை பயனுள்ள–தாக ஆக்குவீர்கள்.நீங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும் பிரார்த்தனையில் ஈடுபடுவீரககள்.

பணியில் பதட்டம் காணப்படும்.பணியிடத்தில் காணப்படும் சூழ்நிலையை அனுசரித்து நீங்கள் செயல்பட வேண்டும்.அதற்கேற்றாற் போல பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று நீங்கள் பதட்டத்துடனும் உணர்ச்சி வசப்பட்டும் காணப்படுவீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. இன்று பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.





